பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 330

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை (23-10-1992)

# புல்மோட்டை பகுதியில் அதிரடி 10 படையினர் உயிரிழந்தனர்

## உதவிக்கு வந்த அணி மீதும் தாக்கு

யாழ்ப்பாணம், அக்டோபர் 23

கிழக்கில் திருகோணமலை மாவட்டம், புல்மோட்டையில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் பத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர். மேலும் ஐந்து படையினர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதல் நடந்த சமயம் அருகிலுள்ள டபிள்மலை என்ற முகாமில் இருந்து உதவிக்குச் சென்ற மற்றோர் இராணுவ அணி மீதும் விடுதலைப் புலிப் போராளிகள் தாக்குதலை நடத்தினர்.

புல்மோட்டை முகாமில் இருந்து டபிள் மலை முகாமுக்கு ரோந்து சென்ற — சுமார் 20 பேரைக் கொண்ட ரோந்து அணி மீதே — புல்மோட்டை முகாமில் இருந்து சுமார் 800 யார் தூரத்தில் வைத்து — இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றைய இந்தத் தாக்குதலின்போது வீரவேங்கை கலைச்செல்வன் [கணபதிப் பிள்ளை தமிழ்வேந்தன் - மூதூர்] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இந்தத் தாக்குதல்களின்போது விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் பலவற்றையும் கைப்பற்றினர். அவற்றின் விவரம் வருமாறு:-

★ ஏ.கே. எல். எம். ஜி — 01
★ ரி - 56 ரகத் துப்பாக்கிகள் — 08

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிப்பு!

யாழ்ப்பாணம், அக். 23

ஆனையிறவுக்குத் தெற்குப் பக்கமாக உப்பளப் பகுதியில் அமைந்திருந்த தொடர் இராணுவக் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலின்போது படையினரின் காவலரண்கள் பல அழிக்கப்பட்டன. பல காவலரண்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. படையினர் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 1.40 மணியளவில் படையினரின் தொடர் காவலரண்கள் மீது சுமார் ஒன்றரை மணிநேரம் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர் என்றும்—

தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் ஆனையிறவு பிரதான இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## 15 வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், அக். 23

ஆனையிறவில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதலின்போது 15 வேங்கைகள் களப்பலியானார்கள்.

அவர்கள் விவரம் வருமாறு:-

இரண்டாம் லெப்டினன்ட் மதனராசா [நல்லதம்பி ஜெயரூபன் — நானாட்டான், மன்னார்.]

★ இரண்டாம் லெப். வேங்கை [வல்லிபுரம் விவேகானந்தன் — ஓமந்தை.]

★ லெப். இன்பன் [ஆரிய நாயகம் ரதன் — இறம்பைக்குளம், வவுனியா.]

★ வீரவேங்கை காங்கேயன் [illegible] தர்ஷன் [பாலசிங்கம் விமலன் — மீசாலை.]

★ தேவன் [டெனிஸ்லாஸ் சிவாகரன் — புதுக்குடியிருப்பு.]

★ மாணிக்கவாசகன் [கண

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இளாலியில் ஹெலி நோட்டீஸ்

யாழ்ப்பாணம், அக். 23

இளாலிக் கரையோரப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசியது. (ஓ-15)

## மாதகல் மாணவர் இருவர் படையினரால் விடுவிப்பு

யாழ்ப்பாணம், அக். 23

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் ஜீ.சி.ஈ. (உயர்தர) பொதுத்தராதரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்கள் இருவர் இளவாலையில் இருந்து நேற்று மீண்டு வந்து சேர்ந்தனர்.

மாதகலைச் சேர்ந்தவர்களான அந்தோனிப்பிள்ளை இமானுவேல் (19 வயது), சுப்பிரமணியம் சுரேந்திரன் (19 வயது) ஆகிய இருவரும் 'குமண' கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்களில் அந்தோனிப் பிள்ளை இமானுவல் பருத்தித் துறையிலும், சுப்பிரமணியம் சுரேந்திரன் யாழ்ப்பாணத்திலும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அ. இமானுவேல் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரியையும், சு.சுரேந்திரன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையும் சேர்ந்த மாணவர்கள் ஆவார்.

(ஓ-3-5-165)

[6 ஆம் பக்கமும் பார்க்க]

## பொருள்கள் இறக்கும் வேலை ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், அக். 23

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று குமண கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

பொருள்கள் இறக்கும் வேலைகளில் ஈடுபடுத்தப்படும் பாஜ்ஜை கட்டி இழுக்கும் வள்ளங்களுக்கு "ஓயில்" வழங்கப்படாததால், இழுபறி நிலைமை நீடித்ததாக அறிய வந்தது.

(ஓ-165-3-15)

## வெல்லாவெளி முகாம் மீது புலிகள் திடீர் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 23

விடுதலைப் புலிகள் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு வெல்லாவெளி இராணுவ முகாம் மீது திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்களையும் சிறு பீரங்கிகளையும் இத் தாக்குதலின் போது பயன்படுத்தினர் என்று கூட்டுப் படைகள் தலைமை அலுவலகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

அத்தாக்குதல் படையினரால் முறியடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (ஓ-எ-10)

## புலிகளுக்கு எதிரான போரில் ஒன்றரை லட்சம் படையினர்

### அமைச்சர் ரணில் தகவல்

கொழும்பு, அக். 23

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தற்போதைய யுத்தத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஆயுத படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாடு பாதுகாக்கப்படாத நிலையில் உள்ளது என்ற குற்றச்சாட்டு தவறானது ஆகும்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கிழக்கு மாகாணத்தில் விசேடமாக பொலன்னறுவைப் பகுதியில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் விசேட திட்டம் ஒன்று இன்னும் ஒரு வாரத்தில் நடைமுறைக்கு வர உள்ளது.

இப் பாதுகாப்புத் திட்ட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

லண்டன், அக். 23

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும், அன்றாட நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்ளவும் அவசியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக நேற்று கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலன்னறுவைப் படுகொலைகளைக் கண்டித்து இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள 'கறுப்பு வெள்ளி' தினத்தை அடுத்தே இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு கொண்டுவரும் பெற்றோர்களைத் தடுக்க எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் —

இன்று தொழுகைக்குப் பின்னர் பள்ளிவாசல்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் முகமாக நாடு முழுவதிலும் உள்ள பள்ளிவாசல்கள் அருகே பொலீஸாரும் பரா குரூப்பின

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சுதந்திரக்கட்சி பகிஷ்கரிப்பு

கொழும்பு, அக். 23

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரிப்பார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் படுகொலைகளை தடுத்து நிறுத்த அரசு சரியான நடவடிக்கை எடுக்காததற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக சிறிமாவோ மேலும் தெரிவித்தார். (இ-10)

**காடுதனை வளர்த்திடுவோம்**
**சூடுதனை தணித்திடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 23

உதவி அரச அதிபர் பிரிவு

## ஐ. நா. தினம்

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள ஊர் காவற்றுறை செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தில் நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்பட உள்ளது.

★ ★ ★

ஐக்கிய நாடுகள் தினத்தை யொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நாளை சனிக் கிழமை தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலை மாண வர்களுக்கிடையிலான போட் டிகளை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடத் தவுள்ளனர். (ஓ-117)

தோறும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினர், தமிழீழ மீட்பு நிதியைச் சேகரித்து வருகின்றனர்.

அந்த வரிசையில் நாளை சனிக்கிழமை பருத்தித்துறை, கரவெட்டி உ. அ. அதிபர் பிரிவுகளில் நிதி சேகரிக்கப் படவுள்ளது.

பருத்தித்துறை மக்களிடம் இருந்து காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும்—

கரவெட்டி மக்களிடம் இருந்து பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் மீட்புநிதி சேகரிக்கப்படும் என்று நிதித்துறையினர் அறி வித்துள்ளனர். (ஓ)


## வைத்திய சேவை

வாதரோகமா? மார்பு ரோகமா? பித்தரோகமா? பீநிச ரோகமா? தலைமுடி உதிர்தலா? தலைமயிர் நரைத் தலா? குழந்தைகளின் ரோகங்களா? மாதர் களின் ரோகங்களா? உடல் மெலிவா? உடல் பருமனா?

எவ்விதமான வியாதிகளுக்கும் ஏற்ற ஆலோசனைகளும் சிகிச்சைகளும் பெறலாம்.

நேரம்:- (தினமும்) காலை 8. 30 முதல் 12. 30 வரை பிற்பகல் 3. 00 முதல் 6 00 வரை.

டாக்டர். த. சிவானந்தன்

"சிவா வைத்தியசாலை"

384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(22993)



மீண்டும்

## யாழ். நகரில் அறிமுகம்

மிற்சுபிஷி வர்ண படச்சுருள்கள்

**The Re Introducing at Jaffna Mitsubishi Colour Film Rolls**

★ குறைந்த சில்லறை விலை.
★ ஸ்ரூடியோக்கள், வெளிப்புறப் படப்பிடிப் பாளர்கள் ஆகியோருக்கு கவர்ச்சிகர விலை.
★ மேலும் விசேட கழிவுகளை மொத்த கொள் வனவில் பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:

## கலக்சி புகைப்பட சேவை

1 ஆம் மாடி,
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3724)



யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம்: யாழ் இந்து மகளிர் கல்லூரி.

காலம்: 24-10-92 சனிக்கிழமை பி ப 3 00 மணி

தயவுசெய்து தவறாது வருகைதந்து தங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

அதிபர்.

(22995)


ரூ. 35 லட்சம் பெறுமதியான

# பாடசாலைத் தளபாடங்களை எடுத்துவர அனுமதி மறுப்பு

## பரிசளிப்பு விழாவில் கல்விப்பணிப்பாளர் உரை

வண்ணார்பண்ணை, அக். 23

யாழ். மாவட்டப் பாட சாலைகளுக்குத் தேவையான முப்பத்தைந்து லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங் களை இங்கு எடுத்து வரு வதற்கு கொழும்பிலுள்ள கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அனுமதி மறுத் துள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந் தரலிங்கம்.

கொக்குவில் இந்துக் கல் லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் பேசு கையில் மேலும் தெரிவித்த தாவது:-

தற்போதைய சூழ்நிலை யில் பெற்றோராகிய நீங்கள் பாடசாலைகளின் முகாமை யாளர்களாகச் செயற்பட்டு பாடசாலையின் அபிவிருத் திக்கு உதவவேண்டும். இதன் மூலமே எமது தமிழ் மாண வர்களின் கல்வி சீரழிந்து போகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

இப்படி அவர் கூறினார்.

ஆரம்பத்தில் கல்லூரி மாண வர்களின் பாண்ட் வாத்தியத் துடன் விழா விருந்தினர்கள் விழாவுக்கு அழைத்து வரப்பட் டனர்.

தமிழீழ தேசியக் கொடியை கல்வித் துறைப் பகுதி பொறுப்பாளர் திரு. இளங் குமரன் ஏற்றி வைக்க கல் லூரிக் கொடியையும் மங்கள விளக்கையும் பிரதம விருந்தி னர் ஏற்றிவைத்தார்.

விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு. மகேந்திரன் தலைமை வகித்தார். மாணவர்களுக் கான பரிசில்களை திருமதி தே. சுந்தரலிங்கம் வழங்கி னார். (இ-162)

## இன்று

யாழ்ப்பாணம், அக். 23

அச்சுவேலி தீர்த்தாக்குளம் பிள்ளையார் கோவிலில் இன்று காலை முதல் மாலை வரை திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி நடைபெறவிருக்கி றது.

விடுதலைப் புலிகளின் வெற்றிவேண்டி இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. (இ-3)

## ஆஸ்பத்திரியில் நேற்றும் அஞ்சலி

இந்திய அமைதிப் படையின ரால் கடமை நேரத்தில் படு கொலை செய்யப்பட்ட டாக் டர்கள், தாதியர், சிற்றூழி யர் உட்பட 21 பேரின் 5 ஆவது நினைவு அஞ்சலி வைபவம் நேற்று இரண்டா வது நாளாக யாழ். ஆஸ்பத் திரியில் இடம்பெற்றன.

இது தொடர்பான வைப வத்தின்போது ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நடனசரத்தினம் ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தர் திரு. பத்மநாதன், ஆஸ்பத் திரி தலைமை மேற்பார்வை யாளர் திரு. குமாரசாமி, மின்வைற் அதிபர் திரு. கனக ராசா ஆகியோர் மரங்களை நட்டனர். (இ-15)

## இன்று ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், அக். 23

யாழ். இலங்கை வங்கி மேற்தரக்கிளையில் இன்று வெள்ளிக்கிழமை ரயில்வே ஊழியர்களின் ஓய்வூதியமும், உள்ளூராட்சி திணைக்கள ஊழியர்களின் ஓய்வூதியமும் பணமாக வழங்கப்படும் என்று பிரதான முகாமையாளர் அறி வித்துள்ளார். (ஓ)

## சிவில் மேல் நீதிமன்றம்

சிவில் மேல் நீதிமன்றங் களை நிறுவும் திட்டம் ஒன் றுக்கு அமைச்சரவை அங்கீ காரமளித்திருக்கிறது.

இதற்காக சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நீதித்துறை மற்றும் உயர் கல்வி அமைச்சர் சாகுல் ஹமீது சமர்ப்பித்த சிபார்சை யும் அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

புதிதாக நிறுவப்படும் சிவில் மேல் நீதிமன்றங்கள் சிவில் வழக்குகளை மட்டுமே விசாரிக்கும் அதிகாரம் கொண் டதாக இருக்கும்.

சிரேஷ்ட மாவட்ட நீதிபதி கள் சிவில் மேல் நீதிமன்ற நீதி பதிகளாக பதவி உயர்வு பெறு வார்கள் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

தற்போது செயல்பட்டு வரு கின்ற மேல் நீதிமன்றங்கள் குற்றவியல் வழக்குகளை மட் டுமே விசாரிக்கும் அதிகாரம் கொண்டவையாக உள்ளன. (இ-எ)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக். 23

யாழ். மாவட்டப் பாட சாலைகளுக்கிடையே யாழ். கல்வித் திணைக்களம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற் றுப் போட்டியில்— 17 வயதுப் பிரிவில் — மூன்று ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக் கிறது.

### கொக்குவில் இந்துவில்

கொக்குவில் இந்து மைதா னத்தில் நடைபெறும் ஆட்டத் தில் சென். ஹென்றீஸ் அணியை எதிர்த்து அச்சுவேலி ம. வி. அணியும், நாவாந் துறை றோ. க. அணியை எதிர்த்து அராலி இந்து அணி யும் மோதும்.

### ஹாட்லியில்

ஹாட்லிக் கல்லூரி மைதா னத்தில் நடைபெறும் ஆட்டத் தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அணியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வி. அணி மோதும்.

★ ★ ★

யாழ். மிற்ரவுண் றோட்ட றக்ற் கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி யின் இரு ஆட்டங்கள் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு நடை பெறும் முதல் ஆட்டத்தில் சென். மேரிஸ் அணியை எதிர்த்து பொற்பதி அணி மோதும்.

அடுத்த ஆட்டத்தில் பாடும் மீன் அணியை எதிர்த்து சென் நிக்கலஸ் அணி மோதும். (உ

# பௌதிகவியல் மீள் பரீட்சை அனுமதி அட்டைகள் வந்தன

## வினாத்தாள்கள் நாளை வரும்

யாழ்ப்பாணம், அக். 23

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் பௌதிகவியல் II பாட மீள் பரீட்சைக்கான அனுமதி அட் டைகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த இந்தப் பரீட்சையில், பௌதிகவியல் II பாடத்துக் கான வினாத்தாள் வெளி யானதை அடுத்து மீள் பரீட்சை நடத்தப்படவிருப் பது தெரிந்ததே.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நாளை விமா னம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டு மறுநாள் 'குமண' கப்பல் மூலம் பருத்தித் துறைக்கு எடுத்து வர ஏற் பாடாகியுள்ளது.

### பணிப்பாளர் அறிவிப்பு

இதேவேளை—

பாடசாலைப் பரீட்சார்த் திகளது அனுமதி அட்டை களை தத்தமது கோட்டக் கல்விப் பணிமனையிலிருந்து சேகரித்துப் பரீட்சார்த்திக ளுக்கு விநியோகிக்கும்படி கல் விப் பணிப்பாளர் அதிபர் களைக் கேட்டுள்ளார்.

வடமராட்சி, பண்டத் தரிப்பு கல்விக்கோட்ட விலா சத்தைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அந்தந்தப் பகுதி கோட்டக்கல்வி அலு வலகத்திலும், வேலணை (தீவக) கோட்டப் பரீட்சார்த் திகள் யாழ். கல்வித் திணைக் களத்திலும் தத்தமது அனுமதி அட்டைகளை நேரில் பெற் றுக்கொள்ளலாம் என்றும்—

ஏனைய கல்விக்கோட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் இடப் பட்டுள்ளன என்று பணிப் பாளர் அறிவித்துள்ளார். (ஓ-3)

## நாளை

தென்மராட்சி, அக். 23

சாவகச்சேரி நகரப் பகுதி கிக்கன கடன் வழங்கு கூட்டு றவுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மாலை 4 00 மணிக்கு டச்சு வீதி சிவகு மாரன் படிப்பகத்தில் நடை பெறும். (ஓ-117)

## சேவைக்கால பயிற்சி

யாழ்ப்பாணம், அக். 23

ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி கருத் தரங்குகள் கோட்ட ரீதியாக நாளை சனிக்கிழமை ஆரம்ப மாகி நடைபெறவுள்ளன.

பயிற்சிக் கருத்தரங்கு நடை பெறும் இடம், காலம் போன்ற விவரங்கள் அடங்கிய அட்ட வணை சகல கோட்டக்கல்வி அலுவலகங்கள் மற்றும் கொத்தணி அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ஓ-5)

## ஆனையிறவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

நேற்றைய தாக்குதலின் போது இராணுவத்தளபாடங் கள் பலவற்றைப் புலிகள் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவத்தில் விடுத லைப் புலிகள் தரப்பில் 15 போராளிகள் வீரமரணம் அடைந்தனர். (ஓ-5-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்

### தொழில் நுட்பக் கல்லூரியில்

# இடை நிறுத்தப்பட்ட பயிற்சி நெறி; மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், அக். 23

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இடை நிறுத்தப்பட்டிருந்த கட்டட மேற்பார்வையாளர் பயிற்சி நெறியை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி கிடைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சி நெறி இங்கு நிலவும் சூழ்நிலையைக் காரணம் காட்டியே இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதனால் இப் பயிற்சி நெறியில் சேர்ந்த மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் தற்போது இறுதிப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்கள் வவுனியாவில் பரீட்சைக்குத் தோற்றவும் —

புதிய மாணவர்களைப் பயிற்சி நெறிக்குச் சேர்த்துக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த-3)

# இராணுவ சீருடை, பிஸ்டல்கள் வைத்திருந்த 4 பேர் கைது

## பண்டாரவளையில் சம்பவம்

கொழும்பு, அக். 23

இராணுவ சீருடைகளுடனும் பிஸ்டல்களுடனும் காணப்பட்ட நான்கு நபர்களை பண்டாரவளைப் பொலீஸார் கைது செய்தனர்.

கும்பல்வேவெல என்ற இடத்தில் வீடு ஒன்றை முற்றுகையிட்ட போது பொலீஸார் அவர்களைக் கைது செய்தனர்.

இதேவேளை —

ஜே. வி. பி. இயக்கத் தலைவர்களில் ஒருவரையும் அந்த இயக்கத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மற்றும் நான்கு பேரையும் எம்பிலிபிட்டியா பொலீஸார் அண்மையில் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட ஜே. வி. பி. முக்கியஸ்தரை அவரினால் மானபங்கப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 17 வயது இளம் பெண் ஒருவர் பொலீஸாரிடம் காட்டிக் கொடுத்தார் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

## மூவர் கைது!

கொழும்பு, அக். 23

ஊவா பரணகமவில் ஆசிரியர்களின் சம்பளப் பணமான ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்களை ஊர்காவல் படையினர் கடந்த செவ்வாய் அன்று கைது செய்தனர். (த-எ)

## ஐரோப்பாவில் வேகமாக பரவும் எய்ட்ஸ்!

வாஷிங்டன், அக். 23

உலக சுகாதார ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் எய்ட்ஸ் நோய் ஐரோப்பாவில் வெகு விரைவாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் மட்டும் எய்ட்ஸ் நோயாளரின் எண்ணிக்கை 28 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. ஜூன் மாத இறுதியில் ஐரோப்பாவில் 77 ஆயிரம் எய்ட்ஸ் நோயாளர்கள் இருந்ததாக ஸ்தாபனம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

(த-10)

## கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, அக். 23

கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றுக்காக கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும் 40 லட்சம் ரூபா பெறுமதியான உடுதுணிகளை சுங்கப் பகுதியினர் அண்மையில் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த உடுதுணிகள் இரண்டு வள்ளங்களுடன் வெள்ளவத்தைக் கடலில் வைத்துக் கைப்பற்றப்பட்டன.

இந்தியாவில் இருந்து இரு வள்ளங்களும் உடுதுணிகளைக் கடத்திக் கொண்டு வந்தன என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

(த-எ)

## 17 பேர் மட்டும் தெரிவு

யாழ்ப்பாணம், அக். 23

யாழ். போதனா வைத்திய சாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறுவதற்காக இம் முறை 17 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து ஒரே ஒரு பெண் ஊழியர் மட்டுமே இம் முறை தாதியர் பயிற்சிக்கு தெரிவாகியுள்ளார்.

வழமையாக ஆகக் குறைந்தது 35 தாதிய மாணவர்களுடன் ஆரம்பமாகும் இப் பயிற்சி நெறி இம் முறை மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவருடன் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. [த-15]

# நிறைவாழ்வு இல்லச் சிறுவர்களுக்கு வர்த்தகர் தீபாவளிப் பரிசு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், அக் 23

சைவ வித்தியா விருத்திச் சங்க நிறைவாழ்வு இல்லச் சிறுவர்களுக்குரிய தீபாவளிப் பரிசை இம்முறை வர்த்தகர் சுப்பிரமணியம் சோமசுந்தரம் வழங்குகிறார்.

தமது மகனான வீரவேங்கை கஸ்ரோ (இயல்வாணன்)-கமல நாதனின் ஞாபகார்த்தமாகப் பெருந்தொகை பெறுமதியான உடுபுடைவைகளை அவர் வழங்கவிருக்கிறார். சைவவித்திய விருத்திச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் சேர்த்து தீபாவளிப் பரிசு அளிக்க அவர் முன்வந்திருப்பதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்நாட்டில் இதுவரை எவருமே அன்பளிப்புச் செய்யாத அளவு பெருந்தொகையை நிறைவாழ்வு இல்லச் சிறுவர்களுக்கு திரு. சோமசுந்தரம் உதவவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தீபாவளிப் பரிசளிப்பு வைபவம் நாளை சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள சைவ வித்தியா விருத்திச் சங்க வட்டு-தொண்டைமண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இயல்வாணனின் நிகழ்வுகள் கொண்ட வீடியோ படக்காட்சி இடம்பெறும். (அ)

## தகநாயக்காவின் 90ஆவது பிறந்த தினம்

கொழும்பு, அக். 23

இலங்கையின் முதுபெரும் அரசியல்வாதியான டாக்டர் டபிள்யூ தகநாயக்கா நேற்று (வியாழன்) தனது தொண்ணூறாவது பிறந்த தினத்தை காலியில் கொண்டாடினார் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெரும்பாகத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு சலவைச் சேவையை வழங்குவதற்கான கேள்விகள் 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். முழுவிபரங்களையும் 23 10-1992இல் வெளிவரும் அரச வர்த்தமானியில் அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்

சு. சே. பி. ப. பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
21-10-1992. (சி-3613)

## பாடசாலை மினி பஸ் சேவை

முன்பு நடத்தப்பட்டு காலச் சூழ் நிலையால் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் 01 - 11 - 1992 இல் இருந்து நடத்தப்படவுள்ளது.

1ஆம், 2ஆம், 3ஆம் ஆண்டுகளுக்குரிய மாணவ, மாணவிகளுக்காக நடத்தப்படும்.

புன்னாலைக் கட்டுவனிலிருந்து பலாலி வீதி ஊடாக யாழ்ப்பாணம் வரை

மாணவ, மாணவிகள் சொந்த இல்லங்களிலிருந்து கூட்டிச் செல்லப்படுவர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொ. சதா;
வி. ரி. எஸ். ஒழுங்கை,
உடுப்பராய் தெற்கு.

[22985]

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

## நூலக வார புத்தகக் கண்காட்சி

சிறப்பம்சம்: ஈழத்து எழுத்தாளர் ஆக்கங்கள்

காலம்: 24 — 10 — 1992 சனிக்கிழமை காலை 9-00 மணி.

திறந்துவைப்பவர்: பிரதம அதிதி - திரு. இ. சுந்தரலிங்கம் (யாழ். கல்விப் பணிப்பாளர்.)

ஆசியுரை: கலாநிதி சு. மோகனதாஸ். (தலைவர் ப. மா. ச.)

சிறப்புரை: திரு. S. முருகவேள். (நூலகர், யாழ். பல்கலைக்கழகம்)

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள், எழுத்தாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

பா. ஆ. ச.
ப. மா. சங்கம். (22987)

உ
சிவமயம்

## மெய்கண்டதேவர் திருநாள்

நாளை சனி, ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நிகழும் மூதறிஞர் க. சி. குலரத்தினம், சித்தாந்தமணி மு. திருஞானசம்பந்தபிள்ளை சொற்பொழிவாற்றுவர். திங்கள் பிற்பகல் 3-00 மணிக்கு கலைப் புலவர் வீதி திருவாசக மன்றத்தில் குருவழிபாடு நிகழும்.

மெய்கண்டார் நிறுவன
சைவசித்தாந்த ஊழியன்.

[22984]

## EXTERNAL REGISTRATION - 1991/92

**Admission and Welcome of Freshers and Sophomore (External Students) - 1991/92**

Admission and welcome of external students will take place in sessions under the Patronage of the Vice-Chancellor in Kailasapathy Auditorium.

Session - I 24-10-92 (Saturday) at 2-00 p.m. for Freshers First in Arts / Commerce.

Session - II 24-10-92 (Saturday) at 3-00 p.m for Sophomore Bachelor of Arts Genral Part-I Bachelor of Commerce Part - I

Please collect your provisional registration letter from 22nd on words from the External Examination Unit.

— Registrar.

University of Jaffna,
21-10-92 (C-3607)

## கேள்விப்பத்திரம் கோரல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு குதிரை வாகனம் ஒன்று செய்வதற்கு சிற்பாசாரிகளிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கேள்விகள் 05 11-1992ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், தர்மகர்த்தாசபை, மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். வாகனத்தின் அளவு, பரிமாணம், மேலதிக விபரம் போன்றவைகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொண்டு கேள்விகளைத் தயாரிக்கவும்.

ந. சிவசுப்பிரமணியம்,
செயலாளர்,

மருதடி விநாயகர் ஆலயக் காரியாலயம்,
மானிப்பாய்.

[5510]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அலுமீனிய பிறேம் போட்ட கண்ணாடி சோக்கேஸ், 3 லாச்சி கொண்ட காசாளர் மேசை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். மரத் தொழிற்சாலை, இல. 93, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (5504)

இறைச்சிக் கோழி (சேவல்) தொகையாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு ஜீவன், மத்திய சந்தை, மானிப்பாய். (5511)

### சைக்கிள் விற்பனைக்கு

மாணவர் அளவு 18" துவிச்சக்கர வண்டி Lumala விற்பனைக்கு உண்டு. மு.ப. 9-00 முதல் பி.ப. 5-00 மணிவரை பார்வையிடலாம். க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம் (A B. Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3720)

### உடன் விற்பனைக்கு

Hy-Line + prima + Bahira வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டு குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 'மலர் விலாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5514)

### தேவை

உடுவில் Y.M.C.A இல் செயற்படுவதற்கு சைக்கிள் திருத்துனர் உடன் தேவை. சம்பளம் முதலியன பேசித் தீர்க்கலாம். தொடர்பு: செயலாளர், உடுவில் Y.M.C.A (மகளிர் கல்லூரி முன்பாக) (22983)

### ஆண்டு - 9 மதிப்பீடு

ஆண்டு 9 தொழில்நுட்பப் பாடங்களின் மதிப்பீட்டுப் படிவங்கள் விற்பனைக்கு உண்டு. பாரதி பதிப்பகம், (A.B Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3721)

### புலமைப் பரிசில் (1993)

தற்போது ஆண்டு 4இல் கற்கும் மாணவருக்கு புலமைப் பரிசில் (1993) மாதிரிப் பரீட்சை 24-10-92 சனி முற்பகல் 8-00, முற்பகல் 11-00 நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், இல 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (22953)

### வெற்றுப்பக்கற்

கோழித்தீன் வெற்றுப் பக்கற் வாங்குகிறோம். மில்க்வைற். (சி-3609)

### செயல் நூல் ஆண்டு 3 11

துரித மீட்டல் பயிற்சி பெறப் பெருந்துணை புரியும் தமிழ்மொழி செயல் நூல்கள், ஆசிரியர்கள் மீட்டல் பயிற்சிவினாக்கள் ஆக்கும் சிரமத்தைக் குறைக்கும். மாணவர்கள் சுயமாகக் கற்று உச்சப் புள்ளிபெற உதவும். வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (5384)

### இடம்மாற்றம்

வேலணையூர் நடனமுருகன் வைத்திய நிலையம், யாழ். சத்திரச் சந்தி, கொட்டடி றோட்டிற்கு இடம் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம். (5513)

### இறைச்சிக் கோழி

சிறப்பு விருந்துகளுக்கு மிக உகந்த புறொயிலர் முறைப்படி வளர்க்கப்பட்ட இறைச்சிச் சேவல்கள் விற்பனையாகின்றன. யாழ் வீதி, உரும்பராய்ச் சந்தி (அன்னை பூபதி கலையரங்கம் அருகில்) (22974)

### O/L கணிதம்

ஆசிரியர் சச்சிதானந்தனின் கணிதம் உதவி நூல்வரிசைகள் மடக்கைகள், விருத்திகள், புள்ளிவிபரவியல், திரிகோண கணிதம், மாதிரி வினாத்தாள்களும், செய்கைகளும் ஒவ்வொன்றும் ரூ 20; மாணவர்கள் தாமாகவே மீட்டலை மேற்கொள்ள சிறந்த நூல்கள். (4783)

### இலவச திருமண சேவை

49வயது, சித்திரை, படித்த, நற்குண மணப்பெண்ணுக்கு அரச, தனியார்துறை, வியாபார மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ்; நாச்சிமார் கோவிலடி. (22956)

## நியமனம்

யாழ்ப்பாணம், அக். 23

ஐக்கிய ராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ் மாவட்ட இணைப்பதிகாரியாக திரு. ஜேசன் குக் காண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்சமயம் யாழ். மாவட்ட இணைப்பதிகாரியாகக் கடமையாற்றும் செல்வி றெபேக்கா இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். (த-3)

## சாவகச்சேரி இளைஞர் பிரான்ஸில் பலி!

தென்மராட்சி, அக். 23

பிரான்ஸில் சாவகச்சேரி இளைஞர் ஒருவர் ரயிலில் இருந்து தவறிவிழுந்து மரணமானார்.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த நாகநாதன் நிர்மலநாதன் (22 வயது) என்ற இளைஞரே விபத்தில் பலியானவர் ஆவார். (ஒ-117)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### கலைப்பீடம்

1991/92 கல்வியாண்டிற்குத் தெரிவான கலைப்பீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் 1992 நவம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

### சித்த மருத்துவம்

சித்த மருத்துவத்திற்கு தெரிவான புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1992 நவம்பர் 2ஆம் திகதியும், முதலாம் வருடம் உட்பட சகல மாணவர்களுக்கான விரிவுரைகள் 11 நவம்பர் 92இல் ஆரம்பமாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

— பதிவாளர்,

யாழ். பல்கலைக்கழகம்.
20 - 10 - 1992.

(சி-3608)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடிதனில்:
12 — 07 — 1959

ஆண்டவன் பிடிதனில்;
19 — 10 — 1987

திதி:
23 — 10 — 1992



செல்வன்

## துரைஜயா பாலச்சந்திரன்

(கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - மகன்)

ஓ! எம் இனிய சோதரனே!
மண்ணிடைப் பிறந்தது நீ மாபெரும்
காரியங்கள் ஆற்றவென நாம் எண்ணி மகிழ்கையில்
கொடுமதி படைத்த கலிப்படையின் -
குண்டிலை தாங்கி
விண்ணிடை சென்றின்று ஐந்தாண்டு ஆனதுவோ
நிலவை வான் பிரித்திடப் புகினும் உம்
நினைவை யாம் மறந்திருப்போமா!
இவ்வுலகை விட்டு உயிர் நீத்து
அகலை மலராய் சென்றினும் அன்ப நின்
உறவை நாம் மறவோம்! மறவோம்!!
எம் உயிருள்ளவரை மறவோம்.

உங்கள் நினைவில் வாழும்;
குடும்பத்தினர்.

சங்கரப்பிள்ளை றோட்,
ஆனைக்கோட்டை.

(22980)

எமது நிறுவனத்தில்
G. A. Q. 1st in Com.
கல்வி கற்ற மாணவர்களுக்கான

## விசேட அறிவித்தல்

**B. A. Part - 1**
**B. Com. Part - 1**

விரிவுரைகள்: 01 — 11 — 1992
(காலை 10 மணி)

ஆரம்பமாகின்றன என்பதை அறியத்தருகிறோம்.

★ ஏனைய மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

நிர்வாகி;
எஸ். அருள்நங்கை.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/3713)

வடமராட்சி

## மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை

★ G. A. Q.; 1st. in Com.
★ B. A. Part - I; B. Com. Part - I

மேற்படி கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன;

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | எஸ். வரதராஜன் B. A. (Hons.) |
| கணக்கியல் | — | பவான் B. B. A. (Hons.) |
| வர்த்தகம் | — | பகில் B. B. A. (Hons.) |
| தமிழ் | — | நடராஜா M. A. |
| இந்து நாகரிகம் | — | குமுதினி B. A. (Hons.) |
| அரசியல் | — | மார்க்கண்டு B. A. |

ஆரம்பம்: 26 - 10 - 1992
திங்கள் 4-00 p. m.

## யங்றோயல்

நெல்லியடி.

(சி-3711)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

1993ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெருபோகத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு, பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். முழுவிவரங்களையும் 23-10-1992இல் வெளிவரும் அரச வர்த்தமானியில் அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,

சு. சே. பி. ப. பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
21-10-1992.

(சி-3614)

## மாற்றம்

## காலாண்டு மக்கள் சஞ்சிகை வெளியீட்டு விழா

தலைவர்: கலாநிதி காரைசுந்தரம்பிள்ளை
இடம்: கம்பன்கோட்டம், நல்லூர்
காலம்: 24-10-1992 (நாளை) சனி
மாலை 3.00 மணிக்கு

"அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்"

வெளியீடு:
தமிழ்த்தாய் மன்றம்

(C/3616)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஐ. நாவும் ஈழத் தமிழரும்

ஐக்கிய நாடுகள் சபை தினம் நாளை அக்டோபர் இருபத்து நான்காம் திகதியாகும். இன்னும் மூன்று வருடங்களில் ஐ. நா. சபை தனது பொன் விழாவைக் கொண்டாடப் போகிறது.

உலகில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் பிரதான நோக்கத்துடனேயே ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. குழப்பம், சண்டை, கலகம், போர் ஆகியவற்றைத் தவிர்த்து உலக மக்கள் அமைதியாகவும், ஒருவருக்கொருவர் சமாதானமாகவும் வாழ்வதற்கு உதவுவதே ஐ. நாவின் முக்கிய கடமையாக அமைந்துள்ளது.

எனினும் ஐ நா தோன்றி 47 வருடங்கள் கழிந்துவிட்ட போதிலும், உலகின் எந்தப் பிராந்தியமாவது அமைதியும் சமாதானமும் நிலவும் பிரதேசமாக இருக்கவில்லை. நாடுகளுக்கிடையே பகைமை புகைகின்றது. நாடுகளுக்குள்ளேயே சச்சரவுகள் நிலவுகின்றன. உலகின் எல்லாப் பிரதேசங்களிலும் பரவலாக ஆங்காங்கு யுத்தங்களும் போர்களும் நடந்து வருகின்றன.

நாடுகளுக்கிடையே உண்டாகும் பிரச்சினைகளையும் நாட்டுக்கு நாடு ஏற்படும் தகராறுகளையும் தீர்ப்பதற்கு, ஐ. நா. நேரடியாகத் தலத்துக்கு வரவேண்டிய புதிய சூழ்நிலையும் தோன்றி வருவதையும் அவதானிக்கலாம். வல்லரசுகள் இரண்டு என்ற நிலை கரைந்து போனதால் ஐ நாவின் பொறுப்பும் கடமைகளும் பெருகி வருகின்றனவோ என்ற நிலை!

மேலும் உலகின் எந்த மூலையைப் பார்த்தாலும் அமைதியின்மையும், வன்செயல்களும், குழப்பமும், சண்டையும் அழிவுகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்றால், ஐ நா. சபைக்கும் அதன் குறிக்கோள்களுக்கும் விடுக்கப்படும் சவால்களாகவே அவற்றைக் கருத வேண்டியுமுள்ளது.

ஐ. நா. தினத்தில் ஈழத்தமிழர் பிரச்சினை குறித்துச் சிந்திப்பது பொருத்தமெனலாம்.

ஐ நா. மனித உரிமை சாசனம், மற்றும் அரசியல் உரிமை சாசனம் என்பவற்றின் கீழ் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஐ. நா. அங்கீகரித்திருக்கிறது.

மேலும் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற கோட்பாட்டின் பாற்பட்டு யுகோஸ்லாவிய உறுப்புரிமையை ஐ நா. ரத்துச் செய்திருக்கிறது அதனால் யுகோஸ்லாவியா உறுப்புரிமைக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் விவகாரத்திலும் இந்த முன்மாதிரிகளை ஐக்கிய நாடுகள் பின்பற்ற முடியாதா? தமிழர்கள் தனித்தேசிய இனம் என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது. தமிழர்களுக்கென ஒரு மொழி, தனியான தாயகம், தனித்துவமான கலாசாரம் என்பன உண்டு. எனவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு தமிழீழக் கோரிக்கையை ஐ. நா. அங்கீகரிக்க வேண்டும். ஸ்ரீலங்காவின் உறுப்புரிமையை ரத்துச் செய்து தமிழீழத்தையும், ஸ்ரீலங்காவையும் தனித்தனியாக விண்ணப்பிக்குமாறு கேட்கலாமே!

# தெரிவுக் குழு யோசனைகள்; தொண்டா-தமிழ்க் கட்சி பேச்சு

கொழும்பு, அக். 23

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான புதிய யோசனை பற்றி அமைச்சர் தொண்டமானுடன் கொழும்பில் உள்ள தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் பேச்சுகள் நடத்தினார்கள்.

மங்கள முனசிங்காவின் புதிய யோசனைகள் அடங்கிய திட்டத்தைத் தாங்கள் நிராகரித்துவிட்டதாக அச்சந்திப்பின்போது தொண்டமானிடம் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தாம் மேற்கொள்ளவிருக்கும் செயல்திட்டங்கள் குறித்தும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் திரு. தொண்டமானுடன் பேசினார்கள்.

இதேவேளை —

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண, நாடாளுமன்றத் தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்கா முன்வைத்த புதிய யோசனையை கொழும்பில் உள்ள ஏழு தமிழ்க்கட்சிகளும் ஏகமனதாக நிராகரித்துள்ளன என்றும் —

இந்த நிராகரிப்புத் தொடர்பான விபரங்களை தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்காவுக்கு கடித மூலம் ஏழு தமிழ்க் கட்சிகளும் நேற்று முன்தினம் தெரிவித்தன என்றும் மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (த-எ)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு விரைந்து காணவேண்டுமாம்!

### லிபரல் கட்சித் தலைவர் சொல்கிறார்

கொழும்பு, அக். 23

தமிழர் பிரச்சினைக்கு விரைவாக அரசியல் தீர்வு காண வேண்டும்.

இலங்கை லிபரல் கட்சித் தலைவர் சணக அமரதுங்க மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார்.

அரசு இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு காண காலதாமதம் செய்வது போலவே, எதிர்க்கட்சிகளும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அவ்வளவு கவனஞ் செலுத்துவதாகத் தெரியவில்லை என்றும் அவர் சொன்னார்.

## தமிழகத்தில்:

## புலிகளின் நிலைபற்றி ஆராய டிக்ஸிற் சென்னை விஜயமாம்

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நிலைபற்றி நேரில் ஆராய்ந்து அறிந்து கொள்ள மத்திய உள்துறைச் செயலாளருடன் வெளியுறவுச் செயலாளர் திரு. ஜே. என். டிக்ஸிற் அடுத்தமாதம் 4ஆம் திகதி இராமநாதபுரம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்கின்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் கடத்தல் முயற்சிகள் மீண்டும் ஆரம்பித்திருப்பது குறித்தும் தமக்குத் தெரிய வந்திருப்பதாக டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

தற்போது விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை குறித்து நேரடியாக அறிந்து கொள்ளவே திரு. டிக்ஸிற், உள்துறைச் செயலாளர் ஆகியோர் தமிழகம் வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (த-எ)

## தனியார் வீடுகளில் வகுப்புகள்

அராலி, அக். 23

சங்கானை சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் அருகில் உள்ள அரிசி ஆலைக் கட்டடத்திலும், தனியார் வீடுகளிலும் நடைபெறுகின்றன.

வலி - வடக்கு, வலி - மேற்கு பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் இப் பாடசாலையில் தங்கியுள்ளதாலேயே இந் நிலை எழுந்துள்ளது. (த-12)

### தொழில் வாய்ப்பு மோசடியில்

## கைதான பௌத்த பிக்குவுக்கு ஜே. வி. பியுடன் தொடர்பு

ஜப்பானில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பல இளைஞர்களிடம் பெருந்தொகையான பணத்தை மோசடி செய்ததாகக் கூறப்படும் 48 வயதான பௌத்தபிக்கு ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இவர் தென்னிலங்கைத் தீவிரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தார் என்று பலமாகச் சந்தேகிக்கப்படுவதாகவும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிக்கு ஆறு தடவைகள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் என்று விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவர் பாணந்துறை, ஹோமகம மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் பல குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் —

தீவிரவாத நடவடிக்கை தொடர்பாக இப் பிக்கு 1990 ஆம் ஆண்டில் மத்துகம பொலீஸாரால் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## மூளைக் காய்ச்சலுக்கு குடும்பஸ்தர் பலி

தென்மராட்சி, அக். 23

மூளைக் காய்ச்சல் நோய்க்கு இலக்கானதாகக் கருதப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமானார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்தவரும் வாழைப்பழ வியாபாரியுமான குலசேகரம் அழகேசன் (35வயது) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இறந்தவர் ஆவார். (ஒ-117)

## "கறுப்பு வெள்ளி" தமிழருக்கு எதிரானது அல்லவாம்!

### அஷ்ரப் சொல்கிறார்

கொழும்பு, அக். 23

பொலன்னறுவைப் படுகொலையைக் கண்டித்து இன்று அனுஷ்டிக்கப்படும் "கறுப்பு வெள்ளி" தினம் தமிழ் மக்களுக்கோ அல்லது அரசுக்கோ எதிரானதல்ல;

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

"தமிழ் மக்கள் எமது எதிரிகள் அல்லர்; 'கறுப்பு வெள்ளி' தினப் பிரகடனத்தை தமிழ்க் கட்சிகளும் ஆதரிக்கின்றன; எனவே இன்றைய ஹர்த்தால் தினத்தில் தமிழ் மக்களுக்கோ, அரசுக்கோ எதிரான செயல்களில் எவரும் ஈடுபடக் கூடாது

"கறுப்பு வெள்ளி தினத்தை அனுஷ்டிக்கும்படி எவரையும் வலவந்தப்படுத்தக் கூடாது; தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை என்றென்றும் தொடர வேண்டும். எமது நடவடிக்கை இதற்குப் பாதகமாக அமைந்து விடக்கூடாது.

"இன்று (வெள்ளி) நடைபெறும் நாடாளுமன்றக் கூட்டத்துக்கு நான் சமுகமளிக்க மாட்டேன்; தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் சுயேச்சை உறுப்பினர்களும் இக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கப்போவதில்லை.

'கறுப்பு வெள்ளி' தினத்தை அனுஷ்டிக்க மக்கள் ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா சோஷலிச முன்னணி ஆகியனவும் முன்வந்துள்ளன." —

இவ்வாறு ஜனாப் அஷ்ரப் கடந்த புதன் அன்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (த-எ)

## பொருள்கள் கொள்ளை

திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள புடவைக் கடை ஒன்றில் இருந்து சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான துணிவகைகளும், பணமும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. (த-143)

# நுண்கலைக்கழக விடயங்களை கலைப்பீட அவை பரிசீலிக்கும்

### முந்திய முடிவை மாற்றிச் சுமுக நிலை

யாழ்ப்பாணம், அக். 23

இராமநாதன் நுண்கலைக் கழக விடயங்கள் பற்றிக் கலந்தாலோசிப்பதில்லை என்ற தனது முன்னைய முடிவை கலைப்பீட அவை மாற்றிக் கொண்டது.

இம் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற கலைப்பீட அவையின் கூட்டத்தில் புதிய முடிவு எடுக்கப்பட்டதாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த மே மாதம் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர், விரிவுரையாளர் ஆகிய இருவர் இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் பாடத்திட்டத்தில் பண்ணிசையை இணைப்பது பற்றித் தெரிவித்த கருத்துகளுக்கெதிராக அவர்களின் பெயர்களைத் தாங்கிய சுலோக அட்டைகளுடன் மருதனார்மடத்தில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்தினை நோக்கி நுண்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலமாக வந்திருந்தனர் அந்த ஊர்வலத்திற்கு பின்னணியாகச் சில போதனாசிரியர்களுமிருந்தனர் எனவும் சந்தேகிக்கப்பட்டது பின்னர் துணைவேந்தர் இது பற்றி விசாரிக்க மூன்று பேராசிரியர்கள் ஆகிய ஒரு விசாரணைக் குழுவையும் நியமித்திருந்தார். இக்குழு தனது அறிக்கையைத் துணைவேந்தரிடம் கையளித்ததைத் தொடர்ந்து துணைவேந்தர் இதன் அமுலாக்கம் பற்றிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

ஊர்வலத்தினால் வெறுப்படைந்த யாழ் பல்கலைக் கழகக் கலைப்பீட அவை சம்பந்தப்பட்டவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் வரை நுண்கலைக்கழகம் சம்பந்தமான விடயங்கள் பற்றிக் கலந்தாலோசிப்பதில்லை என்று முடிவெடுத்திருந்தது. இதனால் இராமநாதன் நுண்கலைக்கழக நடவடிக்கைகள் ஓர் ஸ்தம்பித நிலையை அடையும் கட்டத்தினை எதிர் நோக்கின. இச்சந்தர்ப்பத்தில் கலைப்பீடாதிபதியின் ஆசியுடன் கலைப்பீட ஆசிரியர்கள் சிலர் மேற்கொண்ட முயற்சியால் ஓர் சுமுக நிலை உருவாக்கப்பட்டது.

இதன்படி இம்மாதம் பதினாறாம் திகதி கலைப்பீட அவையின் விசேட கூட்டம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டு அதில் நுண்கலைக் கழகப் போதனாசிரியர்கள் சிலர் குறிப்பாக ஊர்வலத்தில் சம்பந்தப்படுத்தப்பட்ட பேராசிரியர், விரிவுரையாளர் ஆகியோரிடமும், பொதுவாகக் கலைப்பீட அவையிடமும் ஊர்வலம் தொடர்பாக தமது மனவருத்தத்தினையும், மன்னிப்பையும் கேட்டதைத் தொடர்ந்து, கலைப்பீட அவை இராமநாதன் நுண்கலைக் கழக விடயங்களை பற்றிக் கலந்தாலோசிப்பதில்லை என்ற தனது முன்னைய முடிவை மாற்றிக்கொண்டது, இதன் இத்தகைய முடிவு இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் பல திட்டங்களை இவ் அவையினால் முன்னெடுத்துச்செல்வதற்கான வாய்ப்பையும் அளித்துள்ளது— என்றுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரிடம் சிக்கியுள்ளோர் உண்ணாவிரதமிருக்க முயற்சி

## யாழ். வந்து சேர்ந்த மாணவர் தகவல்

யாழ்ப்பாணம், அக். 23

"இளவாலைப் பகுதியில் படையினரிடம் சிக்கியுள்ள பொதுமக்கள் தம்மை விடுவிக்குமாறு கோரி, அடிக்கடி நெருக்குதல் கொடுத்து வருகின்றனர். உறவினர்களைப் பிரிந்து இருப்பவர்களில் சிலர் அண்மையில் உண்ணாவிரதஞ் செய்யவும் முயற்சித்தனர்.''

இராணுவத்தினரின் பிடியில் இருந்து விடுதலை பெற்று நேற்று யாழ். வந்து சேர்ந்த சுப்பிரமணியம் சுரேந்திரன் என்ற மாணவர் உதயன் செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் கடந்த ஆகஸ்டில் நடந்த இராணுவ நடவடிக்கைகளின்போது மாதகல் பகுதியில் வைத்து இராணுவத்தினரின் பிடியில் சிக்கினார்.

உறவினரைப் பிரிந்து தன்னந்தனியாக இரண்டு மாதங்களுக்கு மேல் படையினரின் பிடியில் இருந்த பின்னர் நேற்று இவர் விடுவிக்கப்பட்டார்.

அங்கு படையினரிடம் சிக்கியுள்ள மக்களின் நிலை பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

இளவாலைப் பகுதியில் முழுக் குடும்பங்களாக சுமார் 50 குடும்பங்களும் உறவினர்களைப் பிரிந்த நிலையில் பெண்கள், ஆண்கள் என சுமார் நானூறுக்கு மேற்பட்டவர்களும் சிக்கியுள்ளனர்.

### பயத்துடன் வாழ்கின்றனர்

பெண்கள், குழந்தைகள், முதியோர், கன்னியாஸ்திரிகள் போன்ற அனைவரும் நிம்மதியின்றி பயத்துடன் காலத்தைக் கழித்து வருகின்றனர்.

இளவாலை கன்னியர் மடத்துக்கு அருகில் பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. சுமார் 30 பொலீஸார் அங்குள்ளனர்.

முகாமில் உள்ள மக்களுக்கு பெரும்பாலும் பலாலியில் இருந்து கொண்டுவரப்படும் உணவுப் 'பார்சல்'களே வழங்கப்படுகின்றன. கல்லும் மண்ணும் நிறைந்த சோற்றுப் 'பார்சல்'களை உண்ணமுடிவதில்லை.

சுகாதார வசதிகள் மோசமாக உள்ளன. என்னைப் போன்ற மாணவர்கள் பலரும் அங்கு சிக்கியிருக்கின்றனர். சில குறிப்பிட்ட இடங்களுக்கு அப்பால் யாரும் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

உறவினர்களைப் பிரிந்து வாடும் நூற்றுக்கணக்கானோர் தம்மை விடுவிக்குமாறு கோரி வருகின்றனர்.

### விடுவிக்கக் கோரி அழுது மன்றாட்டம்

இணைப்பதிகாரி கேணல் ரத்னாயக்கா இளவாலைக்கு விஜயம் செய்யும் சமயங்களில் எல்லாம் தமக்கு விடுதலை தருமாறு பெண்களும் ஆண்களும் அழுது மன்றாடுகிறார்கள். பிரிவுத் துயரினால் சித்த சுவாதீனமற்ற சிலர் தகாத வார்த்தைகளால் கூட அதிகாரிகளைக் கண்டபடி பேசித் திட்டுகிறார்கள்.

நாளாந்தம் பொலீஸ் நிலையத்தில் கூடும் மக்கள் "எங்களை விடுவியுங்கள்'' எனக் கோஷமிட்டு வருகின்றனர். அண்மையில் சிலர் உண்ணாவிரதமிருக்க முயற்சித்துப் பின்னர் அதைக் கைவிட்டனர்.

அங்குள்ள மக்களின் நெருக்குதல்கள் காரணமாக கடந்த 10 ஆம் திகதிக்குப் பின்னர் இணைப்பதிகாரி கேணல் ரத்நாயக்கா இளவாலைக்கு வரவில்லை.

பரீட்சை இங்கு நடத்தப்படும், நீங்கள் அதில் தோற்றலாம் என எமக்குக் கூறப்பட்டது. பாடப்புத்தகங்கள் இல்லாமல், உறவினர்களைப் பிரிந்த நிலையில் எம்மால் பரீட்சையில் தோற்ற முடியாது என நாம் கண்டிப்பாக மறுத்தோம்.

அதன் பின்னரே எம்மை யாழ்ப்பாணம் கூட்டிச் செல்ல முடிவாகியதாகத் தெரிகிறது; — என்றார். [ஒ-5]

### புலிகளுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய பணிப்புரை இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிடப்படும்.

பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன;

லொலன்னறுவைப் படுகொலை குறித்து பிழையான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்க வகை செய்யும் பிரேரணை நாடாளுமன்றத்தில் 60 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 116 வாக்குகளும் எதிராக 56 வாக்குகளும் கிடைத்தன. [இ-எ]

## மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேலு வள்ளியம்மை

ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்புமனைவி வள்ளியம்மை 22-10-92 அன்று காலமானார்.

இவர் திருப்பதி (பாக்கியம்), காலஞ்சென்ற சதானந்தன் (புகையிரத திணைக்களம்) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற செல்லத்துரை (உதவி கணக்காளர், அரச கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற ச. லக்ஸ்மி ஆகியோரின் மாமியாரும், செ. வைரமுத்து (திருப்பதி காட்வெயர் ஸ்ரோர்ஸ்), செ. தவபாலசிங்கம் (U K), செ. வரராஜசிங்கம் (U K), திருமதி ச. சமனாம்பிகை, திருமதி ம. கனகாம்பிகை, ச. விக்னேஸ்வரன் (ஜேர்மனி), திருமதி வ. திலகவதி, திருமதி த. மாலினி (U. K), திருமதி ப. ராணி (U. K), சர்வானந்தன் (R. M. P., கோண்டாவில்), மனோகரன் (விரிவுரையாளர், பேராதனை) ஆகியோரின் பேத்தியும், க. செல்லையா (முன்னாள் தபாலதிபர்), காலஞ்சென்ற க. காசிவிஸ்வநாதன் (முன்னாள் வர்த்தக வங்கி உதவி முகாமையாளர்), காலஞ்சென்ற K. V. K தெய்வேந்திரராசா (முன்னாள் உரிமையாளர், யுனைட்டெட் ரேடிங் கோப்பரேசன், கொழும்பு), காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, மகேஸ்வரி, ஆகியோரின் சகோதரியும், செ. துரைசிங்கம் (உரிமையாளர், அசோக காட்வெயர்ஸ், கொழும்பு), சிறீ துர்க்கா காட்வெயர்ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), செ. இராஜேஸ்வரன் (முன்னாள் சச்சிதானந்தா அன் கொம்பனி) ஆகியோரின் பெரியதாயாரும், றெஜிதா, ரவீந்திரநாத், மிராளன், வித்தியா, யாழினி, கணேஸ்வரன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-10-92) 138/1 பருத்தித்துறை வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி. ப 3. 00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஆனைப்பந்தியடி. செ. வைரமுத்து (பேரன்)
(22991)

## தென்மராட்சியில் வயிற்றோட்டத்துக்கு 5 மாத சிசு பலி

தென்மராட்சி, அக். 23

தென்மராட்சிப் பகுதியில் வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவி வருகிறது.

நேற்றும் அங்கு 5 மாதக் குழந்தை ஒன்று பலியானது. மாதகல் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து மட்டுவில் தெற்கில் தங்கியிருக்கும் நந்தகுமார் கஜந்தன் என்ற குழந்தையே பலியானது.

வயிற்றோட்ட (சீதபேதி) நோயுடன், நிமோனியா காய்ச்சலாலும் பீடிக்கப்பட்டவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஒ-117]

## அதிபர்களுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 23

க.பொ. த. (சாதாரணம்) முன்னோடிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை அந்தந்தப் பகுதி கோட்டக்கல்வி அலுவலகங்களிலிருந்து சேகரித்து, பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படி பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். [ஒ]

## கறுப்பு வெள்ளி தொடர்பாக மருதானைப் பொலீஸார் வர்த்தகருக்கு எச்சரிக்கை

கொழும்பு, அக். 23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கறுப்பு வெள்ளி தின அழைப்பை ஏற்று கடைகளை மூடும் கடைச் சொந்தக்காரர்கள் தொடர்ந்து ஐந்து தினங்கள் கடைகளை மூடவேண்டி ஏற்படும்.

இவ்வாறு மருதானையில் உள்ள கடை உரிமையாளர்களை மருதானைப் பொலீஸ் அதிகாரிகள் எச்சரித்துள்ளனராம்.

இது தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஐக்கிய சோஷலிச முன்னணி எம். பி. அத்தாவுட செனவிரத்ன நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரை நிகழ்த்துகையில் மருதானைப் பொலீஸ் அதிகாரிகளின் நடத்தையைக் கண்டித்தார்.

"இது தான் உங்கள் ஜனநாயகமா''? என்று அரசதரப்பினரைப் பார்த்து அவர் கேட்டார். (இ-10)

## அறிவியல் கழக ஆரம்ப விழா

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் அறிவியல் கழக ஆரம்ப விழா இன்று வெள்ளி பிற்பகல் 12 30 மணிக்கு கல்லூரியில் இடம்பெறும்.

கொத்தணி அதிபர் திரு. மு. இராமலிங்கம் விழாவை ஆரம்பித்து வைப்பார்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கல்விக் கோட்டத்தினர் ஏற்பாட்டில் அறிவியல் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. (இ 3)

## 2 ஆயிரம் அகதிகள் நாடு திரும்புவர்

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படும் 2 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் விரைவில் படகுகள் மூலம் தலைமன்னார் கொண்டு வரப்படவுள்ளனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சுச் செயலாளர் கிறின்ரி சில்வா இத் தகவலை செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-எ)

### 15 வேங்கைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிப்பிள்ளை லோகநாதன் — புதுக்குடியிருப்பு.)

★ முருகன் அல்லது விக்னேஷ் (கணேஸ் வின்சென்ற் — மட்டக்களப்பு)

★ மலரவன் (சின்னத்தம்பி புஸ்பராசா — சாஸ்திரி கூழாங்குளம்.)

★ கப்டன் பாணன் அல்லது வினோத் (ஆனந்தராசா குகராசா — கிளிநொச்சி)

★ இரண்டாம் லெப். பிரதீபன் அல்லது ரங்கன் (சிவராசலிங்கம் — பத்மசிறி கிளிநொச்சி.)

★ இரண்டாம் லெப். குட்டிக்கண்ணா (கணபதிப்பிள்ளை சிவகுமார் — வேப்பங்குளம், வவுனியா.)

★ பாண்டியன் (இராசு ரமேஷ் — கொக்குவில்.)

★ வீரவேங்கை ஞானதாஸ்

★ லெப்டினன்ட் இசைவாணன் அல்லது மீரான் — (பொன்னுத்துரை, குணரட்ணம் — மாங்குளம்.)

★ இரண்டாம் லெப். தமிழரசன் (சத்தியானந்தன் சிவகுமார் — அரியாலை.) [ஒ-5]

## தேசிய தொழிற் பரீட்சை

தேசிய தொழிற் பரீட்சைக்கான (தரம் II, தரம் III) அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சை இம் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறும்.

மின் இணைப்பு குழாய் பொருத்துதல், கட்டடத் தொழில், மரவேலை ஆகிய பயிற்சி நெறிக்கான பரீட்சைகள் நடைபெறும் என யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் புதிய கட்சி

சென்னை, அக். 23

தமிழ்நாடு ஜனதாதள் கட்சியில் இருந்து சமீபத்தில் வெளியேற்றப்பட்ட தமிழக சட்டசபை உறுப்பினர் திரு. குமாரதாஸ், தமிழ்நாடு ஜனதாதள் காமராஜர் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார்.

தமிழ்நாட்டில் காமராஜர் பாணி ஆட்சியை மீண்டும் கொண்டு வரப் பாடுபடும் காங்கிரஸ் தலைவர் திரு. மூப்பனாரின் முயற்சிகளுக்குத் தமது புதிய கட்சி ஆதரவளிக்கும் என்றும் திரு. குமாரதாஸ் தெரிவித்தார். (இ-எ)

## கும்பாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், அக். 23

கோண்டாவில் ஸ்ரீ ஞானப் பழனி முருகன் ஆலய கும்பாபிஷேக பூர்த்தி விழா இன்றாகும். இன்று காலை 8. 00 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு பூசை ஆரம்பமாகி சண்முக அர்ச்சனை, திருவீதி உலா ஆகியன இடம்பெறும்.

நாளை மாலை 4 மணிக்கு வைரவ சாந்தியும் தொடர்ந்து இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும். (ஒ)

### கொழும்பில்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

ரும் முழு பலத்துடன் நிறுத்தப்படுவர் என்றும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் இன்று மூடப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் மோதல்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக தமிழ் கடைகள் யாவும் மூடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் பி பி ஸி. தெரிவித்தது. (இ-5)

## புலமோட்டை பகுதியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ | ரி - 81 ரகத் துப்பாக்கி | — 01 |
| ★ | ஏ. கே. எல் எம். ஜி மகஸீன் | — 05 |
| ★ | அதற்குரிய ரவை (லிங்குடன்) | — 485 |
| ★ | ரி - 56 மகஸீன் | — 28 |
| ★ | ரி - 81 மகஸீன் | — 04 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 1270 |
| ★ | ஏ கே. மகஸீன் ஹோல்சர் | — 09 |
| ★ | சப்பாத்து | — 10சோடி |
| ★ | [illegible] | — 01 |
| ★ | இராணுவப் பட்டிகள் | — 06 |
| ★ | [illegible] | — 02 |
| ★ | தலைக் கவசங்கள் | — 07 |
| ★ | கண்ணிவெடி கிண்டிகள் | — 06 |
| ★ | கத்தி | — 02 |
| ★ | மழைக் கவசம் | — 02 |
| ★ | தொப்பிகள் | — 02 |

இதற்கிடையில்—

புல்மோட்டை தாக்குதலில் 10 படையினர் இறந்ததாகவும், 5 பேர் காயமடைந்ததாகவும் கூட்டுப் படைகள் தலைமையக பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க நேற்றைய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [ஒ-எ-10-5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 

[illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org